இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
12.05.2024

சமூக ஆர்வலர் தாக்கப்பட்ட வழக்கில்

# குற்றவாளிகளை கைது செய்யக் கோரி மனு

**திருநெல்வேலி**

பாளையங்கோட்டையில் சமூக ஆர்வலர் பெர்டின் ராயன் மர்ம நபர்களால் அரிவாளால் வெட்டப்பட்ட வழக்கில் குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு தேசிய செயலர் ஹென்றி திபேன் உள்ளிட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் ஹென்றி திபேன் கூறியதாவது:

மனித உரிமை காப்பாளர் பெர்டின் ராயன் மர்ம நபர்களால் வெட்டப்பட்டு கொலை முயற்சி நடந்துள்ளது. இந்த வழக்கில் இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பாக நெல்லை மாநகர காவல் ஆணையரை சந்தித்து,



↑ மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு தேசிய செயலர் ஹென்றி திபேன் உள்ளிட்டோர் திருநெல்வேலி ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாக கைது செய்ய வலியுறுத்தியுள்ளோம். போலீஸார் குற்றவாளிகளை கைது செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் சாதிய தாக்குதலுக்கு உள்ளான மாணவருக்கு தமிழக அரசு சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்ததுடன், கல்வி தடைபடாமல் இருக்க பல்வேறு உதவிகள் செய்தது. தற்போது அந்த மாணவர் பிளஸ்-2 பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண் எடுத்துள்ளார், அவரை பாராட்டுகிறோம். அவர் வெட்டப்பட்டதன் காரணமாக தாழ்த்தப்பட்டோருக்கான சட்டப்படி அரசு ரூ.1.93 லட்சம் வழங்கியது.

அவரது குடும்பத்தினருக்கு பாளையங்கோட்டை ரெட்டியார்பட்டி பகுதியில் அரசு சார்பில் ஒரு வீடு வழங்கப்பட்டது. அந்த வீட்டை மறுவாழ்வு திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கி இருக்க வேண்டும். அப்படி செய்யாமல் ரூ.1.17 லட்சம் வசூலித்துள்ளனர். இந்த தொகையை திரும்ப வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட செயலர் ஸ்ரீராம், இந்திய கம்யூனிஸ்ட் நிர்வாகி ரெங்கன், வான்முகில் அமைப்பின் நிர்வாகி பிரிட்டோ, பேராசிரியை பாத்திமா பாபு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.